வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 09.01.2025 வியாழக்கிழமை இதழ் : 09 பக்கங்கள் : 12




# பயங்கரவாதச் சட்டம் இன்னும் ஏன் அமுலில்?

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கேள்வி

கொழும்பு, ஜன. 09

**எதிர்க்கட்சியில் இருந்தபோது நீங்கள் எதிர்த்த பயங்கரவாதத் தடைச் சட்டம் ஏன் இன்னும் அமுலில் காணப்படுகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் அரசிடம் கேள்வி எழுப்பினார்.**



பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் நேற்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அப்போது நாட்டில் இருந்த பிரிவினைவாத, பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தவே

11



## நிரந்தர அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்கா தொடர் பங்களிப்பு!

### அந்நாட்டுத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 09

இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்கா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும் என அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமெரிக்கத் தூதுவர் யூலி சங் அவர்களுக்குமிடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

11

## இந்த ஆண்டு வலுவான மீட்சியில் இலங்கை அரசு கவனம் செலுத்தும்

கொழும்பு, ஜன. 09

இலங்கை 2024 ஆம் ஆண்டு 5 வீத உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை பதிவு செய்த பின்னர் இந்த ஆண்டு வலுவான மீட்சியில் கவனம் செலுத்தும் எனவும் , இது கடந்த ஏழு ஆண்டுகளில் மிக உயர்ந்ததாக இருக்கும் எனவும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பி.நந்தலால் வீரசிங்க நேற்று தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் 2022ஆம் ஆண்டில் கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடியின் கீழ் பாதிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் 2.9 பில்லியன் டொலர் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவியை பெற்று, டிசம்பர் மாதத்தில் 25 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைத்த பின்னர்

11

## 1 இலட்சத்து 15,000 மெற்றிக் தொன் நேற்று வரையில் அரிசி இறக்குமதி

கொழும்பு, ஜன. 09

இறக்குமதி அனுமதிப் பத்திரமின்றி அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியதன் பின்னர் நேற்று மாலை வரை 115, 000 மெற்றிக் தொன் அரிசி துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலி அருகொட தெரிவித்தார்.

குறித்த 115,000 மெற்றிக் தொன் இறக்குமதி அரிசித் தொகையில் 45, 000 மெற்றிக் தொன் பச்சை அரிசி மற்றும் 70,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாக அவர் கூறினார்.

இதேவேளை, சுங்கத்திற்கு அனுப்பப்படும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியானது விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு எதிர் நோக்கும் அரிசி

11

## சவால்களுக்கு அரசு ஒருபோதும் அஞ்சாது

### பிரதமர் சபையில் திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 09

சவால்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஒருபோதும் அஞ்சாது. சமூக மாற்றத்துக்கான எமது பயணம் ஓர், இரு நாட்டிகளில் இடம்பெறக் கூடியதல்ல என்பதால் எத்தகையை எதிர்ப்புகள் வந்ததாலும் அவற்றை முறியடித்து முன்னோக்கி பயணிப் போம். அதற்காகவே மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப் பெற்றது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அசித நிரோசன எகொட வித்தான எம்.பி கிளீன்

11

## மூன்று நாள்களுக்குள் தீர்வு இல்லாவிட்டால் போராட்டம்

### ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 09

தங்களது கோரிக்கைக்கு நியாயமான தீர்வு மூன்று நாட்களுக்குள் கிடைக்காவிடின் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

பதவி உயர்வு, வேதன அதிகரிப்பு மற்றும் சேவையை நிரந்தரமாக்கல் போன்ற கோரிக்கைக்குரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என அந்த கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அந்த கூட்டமைப்பு நேற்று முற்பகல் கல்வி

11

## லசந்த கொலை தொடர்பில் நீதியை நிலைநாட்டுவோம்!

### நீதியமைச்சர் ஹர்ஷன உறுதி

கொழும்பு, ஜன. 09

லசந்த விக்கிரமதுங்கவின் மரணம் தொடர்பில் நீதியை நிலைநாட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு காரணிகளால் தாமதப்படுத்தப்பட்டுள்ள வழக்குகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்போம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின்

11

## நாட்டில் சட்டம், நீதித்துறை பாதுகாக்கப்படவேண்டும்!

கொழும்பு, ஜன. 09

நாட்டின் சட்டம் நீதி பாதுகாக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே முதலீட்டுகளை கவர முடியுமாக இருக்கும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போது சபையில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானோருக்கு அலுவலகம்

கொழும்பு, ஜன. 09

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று, மக்கள் அன்றாடம் வாழ முடியாமல் சிரமப்படுகின்றனர்.

11

## கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் சபையில் விவாதத்துக்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஜன. 09

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் விவாதத்திற்கான சந்தர்ப்பத்தை வழங்க எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போது கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட வாய் மூல வினாவுக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி வாக்குறுதி வழங்கியதை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்!

எஸ்.எம். மரிக்கார் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 09

**அரசியல் இலாபத்துக்காக நாட்டு மக்களுக்கு போலியான வாக்கு றுதிகள் வழங்கியதை அரசாங்கம் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வந்து 24 மணித்தியாலத்துக்குள் எரிபொருள் மீதான 50ரூபா வரியை இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட் டார். எரிபொருள் இறக்குமதி தரகுப்பணம் இன்றும் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கா செல்கிறது என ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் ஆளும் தரப்பிடம் கேள்வியெழுப்பினார்.**

பாராளுமன்றத்தில் நடை பெற்ற மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024" தொடர் பான சபை ஒத்திவைப்பு பிரே ரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆளும் தரப்பினர் பேசுகிறார் கள். ஆனால் நாட்டு மக்கள் இன்றும் பொருளாதார நெருக் கடியில் தான் உள்ளார்கள்.

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வருவதற்கு பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் இன்று அனைத்து வாக்குறுதிகளையும் மறந்து விட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார 2024.08.19 ஆம் திகதி கல்கமுவ பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற் றுகையில், எரிபொருள் மீது முறையற்ற வகையில் வரி விதிக் கப்பட்டுள்ளது.

இறக்குமதிக்கு மேலதிகமாக 50 ரூபா வரி விதிக்கப்பட்டுள் ளது. இதனால் தான் எரிபொரு ளின் விலை அதிகரிக்கப்பட் டுள்ளது. ஆகவே ஆட்சிக்கு வந்தவுடன் இந்த 50 ரூபா வரியை நீக்குவதாக குறிப்பிட் டார்.

ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில் வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை.

எரிபொருள் இறக்குமதியின் தரகுப் பணம் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜே சேகரவுக்கு செல்வதாக குற்றஞ் சாட்டப்பட்டது. இன்றும் அந்த தரகுப் பணம் இன்றும் காஞ்சன விஜேசேகரவுக்கா செல்கிறது என்று கேட்கிறோம்.

வரிகளை குறைப்பதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது சிரேஷ்ட பிரஜை களின் சேமிப்பிலும் வரி அற விடப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரிக் கொள் கையையே தற்போதைய ஜனா திபதி அநுரகுமார முன்னெ டுக்கிறார - என்றார்.

(அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 09

நேற்று முன்தினத்துடன் ஒப் பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன் றின் கொள்முதல் பெறுமதி 286 ரூபாய் 46 சதம், விற்பனைப் பெறுமதி 300 ரூபாய் 52 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 362 ரூபாய் 95 சதம், விற்பனைப் பெறுமதி 376 ரூபா 90 சதம்.

யூரோ ஒன்றின் கொள் முதல் பெறுமதி 300 ரூபாய் 33 சதம், விற்பனைப் பெறுமதி 312 ரூபாய் 86 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 317 ரூபாய் 89 சதம், விற்பனைப் பெறுமதி 333 ரூபாய் 34 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 202 ரூபா 2 சதம், விற்பனைப் பெறு மதி 210 ரூபாய் 80 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 179 ரூபாய் 81 சதம், விற்பனைப் பெறுமதி 189 ரூபாய் 26 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 212 ரூபாய் 5 சதம், விற்பனைப் பெறுமதி 221 ரூபாய் 89 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 83 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 91 சதம் என அறிவிக் கப்பட்டுள்ளது. (அ)

# பஸ் உரிமையாளர்களின் போராட்டம் இடைநிறுத்தம்!

கொழும்பு, ஜன. 09

பதில் பொலிஸ் மா அதிபரு டனான கலந்துரையாடலின் பின்னர், தனியார் பஸ் உரிமை யாளர்கள் திட்டமிட்டிருந்த பணிப்புறக்கணிப்பு தற்காலிக மாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையின் போது தனியார் பஸ் உரிமையா ளர்களுக்கு கிளீன் சிறிலங்கா போக்குவரத்து நடவடிக்கைக்கு இணங்க 3 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

பொதுப் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்களை தடுக்கும் நோக்கில் புதிய நடை முறைகள் அறிமுகம் செய்யப் பட உள்ளது

மேலும் உரிய கட்டுட்டு மான வசதிகள் இல்லாத கார ணத்தினால் சில வீதி விபத் துக்கள் இடம்பெறுவதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

# போதை மாத்திரைகளுடன் யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 09

சாவகச்சேரி பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மட்டுவில் பகுதி யில் போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது, வல் வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன், மட்டுவில் பகுதியில் வைத்து 50 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலி ஸார் மேற்கொண்டு வருகின் றனர். (எ-05)

# பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரம் ஆசிரியர் ஒருவர் உடனடிப் பணி நீக்கம்

கொழும்பு, ஜன. 09

வடமத்திய மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் தவணைப் பரீட்சையின் வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பில் ஆசிரியர் ஒருவர் பணி இடை நீக்கம் செய்யப் பட்டுள்ளார்

6 ஆம் மற்றும் 7ஆம் தரங்களுக்கான பரீட்சை வினாத்தாள் கசிந்த விவகாரம் தொடர்பிலேயே இந்த ஆசி ரியர் உடன் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள் ளதாக வடமத்திய மாகாண கல் விச் செயலாளர் தெரிவித்தார். (அ)

# மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச அதிகாரிகள் செயல்பட வேண்டும்

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.09

அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செயலாற்ற வேண்டும். அரசாங் கப் பணியாளர்களை அதற்குத் தயார்படுத்தும் வகையில் ஐரெக் திட்டத்தின் ஊடான பயிற்சிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அரச சேவை பட்டதாரிகள் சங்கத் தின் கோரிக்கையின் பேரில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட் டில் இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்து ழைப்புத் திட்டத்துக்கு - ஐரெக் விண்ணப்பிக்கும் முறைமை தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் யாழ்ப்பா ணம் கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இதில், கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர் மேலும் கூறுகையில், அரச பணியாளர் களின் சேவைகளை மேம்படுத் துவதற்கு பயிற்சிகள் அவசியமா கின்றன. காலத்துக்கு காலம் அரச பணியாளர்களுக்கு பயிற் சிகளை வழங்குவதும் இதற் குத்தான். எமது மாகாணத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஐரெக் ஊடான பயிற்சிக்கு விண்ணப் பிப்பது குறைவாக இருந்ததாக துணைத்தூதுவர் தனது உரை யில் சுட்டிக்காட்டினார்.

இம்முறை அதை அதிக மாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கின்றோம். வடக்கு மாகாண சபைக்கும் யாழ்ப்பாணத்தி லுள்ள இந்தியத் துணைத்தூதர கத்துக்கும் இடையிலான உறவு நெருக்க மானது.

அவர்கள் இவ்வாறான பயிற் சிகளை மாத்திரமல்ல எமது மாகாணத்துக்கு பல்வேறு உதவிகளையும் செய்திருக்கின் றார்கள். குறிப்பாக இன்றும் இந்திய வீட்டுத் திட்டம் என்று அவர்களால் எங்கள் மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட் டத்தை அழைக்கின்றோம். அது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய கொடை - என்றார். (எ- 05)

# "பட்ஜெட்டினால் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள்"!

கொழும்பு, ஜன. 09

தற்போதைய ஜனாதிபதியினால் முன்வைக்கப் படவுள்ள வரவு செலவுத் திட்டமானது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்டியெ ழுப்பப்பட்ட தேசியக் கொள்கைத் திட்ட வரம்புக் குள் இருந்தே முன்வைக்கப்பட வேண்டும். அதற்கு அப்பால் சென்று வரவு - செலவுத் திட் டத்தை முன்வைத்தால் நாடு மீண்டும் பொரு ளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் உலுவிட்டிகேவிலுள்ள கட்சி அலு வலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலேயே வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்திருக்க வேண் டும். மூன்று மாத தாமதத்தின் பின்னரே அதனை முன்வைக்கப் போகின்றனர்.

இந்தத் தாமதத்தால் ஏற்படக்கூடிய நட்டத்தை தவிர்த்துக்கொள்வது இலகுவான விடயம் அல்ல. அத்துடன் அரசாங்கம் நினைத்தவாறு வரவு- செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெ டுத்தார். முக்கியமான 92 சட்டமூலங்களை பாராளு மன்றத்தில் முன்வைத்தே அவர் அதனைச் செய்தார்.

அந்த சட்டங்களுக்கு அமையவே இந்த வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவேண்டும். இதனை தவிர வேறு முறைகள் கிடையாது.

ஏதேனும் முறையில் இந்தச் சட்டங்களுக்கு புறம்பாக வரவு - செலவுத் திட்டங்களை முன் வைத்தால் நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்த நாடா கும் என்பதனை உறுதியாக கூற முடியும் - என் றார். (அ)

# பதிவு செய்யப்படாத கைபேசிகள் இந்த மாதத்துடன் செயலிழக்கும்!

கொழும்பு, ஜன. 09

கையடக்க தொலைபேசி களை பதிவு செய்வதற்கு வர்த்த கர்கள் மற்றும் இறக்குமதியா ளர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் 28ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள தாக இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

இதன்படி, தங்களது ஆணைக்குழுவில் ஐ.எம்.ஈ.ஐ இலக்கத்தைப் பதிவு செய்யாத கைத்தொலைபேசிகளில் குறித்த கால அவகாசத்தின் பின்னர் தொலைபேசி வலையமைப்பு இயங்காது என அந்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எனினும், எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஐ. எம்.ஈ.ஐ இலக்கத்தைப் பதிவு செய்தவர்களுக்கு எந்தவித சிக்கலும் ஏற்படாது எனவும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஸ்டார் லிங்க் சேவைக்கு உரித்தான தொலைத்தொடர்பு பொதிக ளுக்கான கட்டணங்களுக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.01.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# ரோஹிங்கியா அகதிகள் பிரச்னை

ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்திருக்கின்றார். அகதிகள் எவரும் நாட்டுக்குள் நுழையினும் அவர்களுக்குரிய பாதுகாப்பை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. ஆனால், அவர்களை பராமரிக்கும் ஆற்றல் ஓர் அரசாங்கத்துக்கு இருக்குமானால் மட்டும்தான் அவர்களை நாட்டுக்குள் பராமரிக்க முடியும். முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரது கருத்துக்கு தலையசைக்கும் நோக்கிலேயே சஜித் பிரேமதாச இதனைக் கூறுகின்றார். ரோஹிங்கியா மக்கள் முஸ்லிம்களாக இல்லாதிருந்திருந்தால் அவர்கள் நிச்சயம் அகதிகள் தொடர்பில் கரிசனை காண்பித்திருக்கமாட்டார்கள்.

மியன்மாரில் இடம்பெற்ற வன்முறைகளைத் தொடர்ந்து அங்கு தொடர்ந்தும் வாழமுடியாத நிலையில் அந்த மக்கள் வேறு நாடுகளில் அடைக்கலம் தேடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இங்கு கவனிக்க வேண்டிய முரண்பாடான விடயம் ஒன்றுண்டு. ரோஹிங்கியா முஸ்லிம்களை திருப்பி அனுப்ப வேண்டாம் - அது சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் செயலாக நோக்கப்படும் என்று கருத்துரைத்திருக்கும் சஜித் பிரேமதாச ரோஹிங்கியா முஸ்லிம்கள் எதனால் பாதிக்கப்பட்டனர் - அவர்களுக்கு அநியாயம் இழைத்த பின்னணி என்ன என்பது பற்றிப் பேசவில்லை. ரோஹிங்கியா முஸ்லிம்கள் தொடர்பில் பேசும் எவருமே இந்த விடயத்தை தொடவில்லை.

மியன்மாரில் ஆட்சியதிகாரத்தில் இருக்கும் பௌத்த அதிகாரத் தரப்பினால் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு, அடித்து விரட்டப்பட்டவர்கள்தான் ரோஹிங்கியா முஸ்லிம்களாவர். இதன் விளைவாகவே அவர்கள் நாடு நாடாக அடைக்கலம் தேடி அலைகின்றனர். ரோஹிங்கியா முஸ்லிம்கள் அழித்தொழிக்கும் நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய 969 என்னும் அமைப்பின் தலைவரான விராது, ஒரு பௌத்த பிக்கு ஆவார். 969 என்றால் என்ன என்று நோக்கினால் இன்னும் ஆச்சரியம் காத்திருக்கும் - அதாவது, புத்தரின் போதனைகளான புத்தம், சங்க, தம்ப ( புத்தம் சரணம் கச்சாமி ) ஆகியவற்றை அடையாளப்படுத்தும் வகையிலேயே 969 என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தில் இருக்கும் போது, பொதுபல சேனாவின் அழைப்பின் பேரில் விராது இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

மியன்மார் படுகொலைகளை தொடர்ந்து வெளியேறிய ரோஹிங்கியா மக்களை இந்தியா உள்நுழைய அனுமதிக்கவில்லை. இந்திய உள்துறை அமைச்சு ரோஹிங்கியா முஸ்லிம்களை சட்டவிரோத குடியேறிகளாகவே குறிப்பிட்டிருந்தது. இந்த நிலையில் அவர்களை பங்களாதேஷ் மட்டுமே அனுமதித்திருந்தது. பங்களாதேஷில் ஏற்பட்ட கிளர்ச்சியை தொடர்ந்து அங்கு ஆட்சி குழப்பியுள்ளது. இந்த நிலையில் ரோஹிங்கியா மக்கள், யாரோ ஒரு தரப்புடைய வழிகாட்டலில் இலங்கையை நோக்கி வந்திருக்கின்றனர். இலங்கையை நோக்கி செல்லுமாறு தங்களுக்கு அறிவுரை கூறப்பட்டதாகவே விசாரணைகளில் கூறியிருக்கின்றனர். எனவே இந்த விடயத்தை உள்ளூர் அரசியலாக நோக்காமல் தூரநோக்கோடு அணுக வேண்டும்.

இலங்கை இந்தளவு பின்தங்கியதற்கும், இப்போதும் பின்தங்கிக் கொண்டு செல்வதற்கும் ஒரேயொரு காரணம்தான் - அதாவது, விடயங்கள் அனைத்தையும் உள்ளூர் அரசியல் நலன்களில் இருந்து நோக்குவதாகும். இங்குள்ள முஸ்லிம்களின் வாக்கு தேவையென்று கருதுபவர்கள் ரோஹிங்கியாவுக்கு ஆதரவாக பேசுவதை ஓர் அரசியலாக முன்னெடுக்க முற்படுகின்றனர். சஜித் தற்போது ரோஹிங்கியா மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதன் பின்னணி இதுதான்.

ஆட்சியிலிருப்பவர்கள் என்ன செய்தாலும் அதனை எதிர்க்கும் எதிரணிகள், பின்னர் தாங்கள் அதிகாரத்திற்கு வந்ததும் எதை எதிர்த்தார்களோ அதனையே செய்வர். இதுதான் இலங்கைத் தீவில் கடந்த 75 வருடங்களாக இடம்பெற்றுவருகின்றது. ஆனால் இது அடிப்படையிலேயே தவறானது. நாட்டின் எதிர்காலத்திற்காக, பொது விடயங்களில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்னும் விடயங்களை தாண்டிச் சிந்திக்கும் அரசியல் கலாசாரம் துளியவு கூட இலங்கையில் வளர்சியடையவில்லை. இதன் காரணமாகத்தான் இன்றும் அரசியலமைப்பில் இருப்பவற்றைக் கூட முழுமையாக அமுல்படுத்துவதில் அக்கறையற்ற ஆட்சியாளர்களாக தொடர்கின்றனர்.

# உலக அமைதியை விரும்பிய 'கடலை காட்டர்'!

- அனந்த பாலகிட்ணர்



அமெரிக்க ஜனாதிபதிகளில் எளிமையின் வடிவமாக வாழ்ந்து மறைந்துள்ளார் ஜிம்மி காட்டர். ஒரு நிலக்கடலை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரான ஜம்மி காட்டர் படித்துப்பட்டம் பெற்று அமெரிக்க கடற்படையிலும் ஏழுவருடகாலம் ஒரு லெப்டினன்டாக பணியாற்றியிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு கல்வித்தகமை மட்டுமல்ல. அமெரிக்க ஆயுதப்படைகளில் பணிபுரிந்திருக்க வேண்டியதும் மிக முக்கிய தகமையாக இருக்கின்றது. எனவே ஜிம்மி காட்டர் அமெரிக்க கடற் படையிலும் ஏழு ஆண்டுகள் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடும்பத தொழிலாக நிலக்கடலைச் செய்கையை மேற்கொண்டிருந்தார் ஜிம்மி காட்டர்.

1924ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பிறந்த ஜிம்மி காட்டர் 1924 ஆம் ஆண்டு தமது நூறாவது வயதில் கடந்த டிசம்பர் மாதம் 29ஆம் திகதி காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது நூறாகும் (100). அமெரிக்க அதிபர்களில் அதிக காலம் உயிர் வாழ்ந்தவராக ஜிம்மி காட்டர் விளங்கினார்.

அமெரிக்காவின் ஜனநாயகக்கட்சி சார்பாக அரசியலில் குதித்த ஜிம்மி காட்டர், ஜோர்ஜியா மாநிலத்தின் 76ஆவது ஆளுநராகவும் தெரிவாகியிருந்தார். இப்பதவியில் 1971 ஆம் ஆண்டு முதல் 1975ஆம் ஆண்டு வரை அவர் பணியாற்றினார்.

இயல்பாகவே அமைதியான சுபாவமுடையவராகவும் கெடுபிடி யுத்தங்களுக்கு தமது ஆட்சிக்காலத்தில் இடந்தராதவராகவும் ஜிம்மி காட்டர் விளங்கினார்.

ஜிம்மி காட்டர் பெரிதும் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டினார். ஜனநாயகம், சர்வதேச அமைதி, மனித உரிமைகள் போன்றவற்றுக்காக 2002ஆம் ஆண்டு நோபல் சமாதான பரிசையும் ஜிம்மி காட்டர் பெற்றிருந்தார்.

கீர்த்தி மிக்க அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையைப்பற்றிய நூல் இளமையில் - வறுமையில் துவண்டு பின்னர் வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபராக ஆபிரகாம் லிங்கன் குடியேறினார் என்று குறிப்பிடுகின்றது. 'குடிசையிலிருந்து வெள்ளை மாளிகை வரை' என்பதே அந்த நூலின் தலைப்பாகும்.

ஆனால் ஜிம்மி காட்டர் வெள்ளை மாளிகையில் ஒரு தடவை மாத்திரமே அமெரிக்க அதிபராக பதவி வகித்த பின்னர் 1981ஆம் ஆண்டு பதவி விலகியதும் ஒரு சிறு வீட்டிலேயே குடியேறியிருந்தார். அது அவர் முன்பு வகித்த உயரிய அந்தஸ்தை வெளிப்படுத்துவது போல டாம்பீகமானதாக இருக்கவில்லை.

மிகவும் சிறியதான சாதாரண அமெரிக்க குடிமகனொருவர் வாழ்வதைப்போன்ற இல்லத்திலேயே அவர் வாழ்ந்திருந்தார். அவ்வீட்டின் பெறுமதி ஒரு லட்சத்து அறுபத்தி ஏழாயிரம் (1,67,000) டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் அவருக்கு அமெரிக்க அதிபருக்குரிய வருடாந்த ஓய்வூதியமாக 2,17,000 டொலர்களே இறுதிவரை கிடைத்திருந்தது. இத்தொகையுடனேயே அவர் சிக்கனமாக தமது மனைவி ரோசலின் காட்டருடன் வாழக்கை நடத்தி வந்திருந்தார்.


அவர் நடமாடித்திருந்த ஓய்வு காலத்தில் சுப்பர் மார்க்கெட் கடைகளுக்குச்சென்று ஏனைய மக்களோடு ஒருவராக தாமும் வரிசையில் நின்று பொருட்களை வாங்கிச்சென்றார்.

அமெரிக்கா, முதல் தரமான மோட்டார் கார்களை உலகத்தில் உற்பத்தி செய்கின்ற நாடாகும். இருந்தபோதிலும் தாம் ஓய்வு பெற்றபோது வாங்கிய மோட்டார் காரையே அவர் 26 ஆண்டுகள் வரை பாவித்திருந்தார். அதீத முதுமை காரணமாக அவர் பின்னர் சக்கர நாற்காலியில் தமது இறுதிக்காலத்தைக் கழித்தார். தமது பிள்ளைகளினதும் உதவியாளர்களினதும் பராமரிப்பில் வாழ்ந்த ஜிம்மி காட்டரின் மனைவி ரோஸலின் காட்டர் ஒரு நல்ல துணைவியாராக வாழ்ந்து 2023ஆம் ஆண்டு காலமானார். ஜிம்மி காட்டர் தம்பதியருக்கு நான்கு பிள்ளைகளிருக்கின்றனர் இவர்களது மணவாழ்க்கை எழுபத்து ஏழு (77) ஆண்டுகள் நீடித்திருந்தது.


அமெரிக்க முன்னாள் அதிபர்களில் பலர் தமக்கென தனிப்பட்ட விமானங்களை வைத்திருந்தனர். இதுதவிர வேறு விமானங்களில் செல்லும் போது விமானத்தின் பிரத்தியேக சொகுசுப் பயண பகுதிகளிலேயே பயணிப்பர். ஆனால் ஜிம்மி காட்டர் தமக்கென விமானங்களை வைத்திருக்கவில்லை. விமானப்பயணங்களின்போது சாதாரண பயணிகளோடு ஒருவராகவே அவர் பயணித்திருந்தார். அமெரிக்க அதிபராக இருந்து ஓய்வு பெற்றபின்னர் ஒரு சிறந்த கிறிஸ்தவ பாரம்பரிய வாழ்க்கை முறையில் அவர் வாழ்ந்திருந்தார். சமயப் பேச்சுக்கள் மற்றும் சமூக,பொருளாதார, மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து அவர் ஆர்வம் காட்டினார். தமது சேமிப்பில் ஏறத்தாள முப்பது மில்லியன் டொலர்கள் வரை மனிதாபிமான நட்வடிக்கைகளுக்காக அவர் செலவிட்டிருந்தார். இந்த மனிதாபிமான நடவடிக்கைகளில் வறுமையான நாடுகளில் சிறுவர்களுக்கு வரக்கூடிய கண்வியாதிகள், போஷாக்கின்மையால் வருகின்ற நோய்களுக்காக தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட ஜிம்மி காட்டர் நிறுவனம் மூலமாக உதவிகளை வழங்கினார். அத்துடன் அமெரிக்க அதிபர்களாக இருந்தவர்கள் ஓய்வு காலத்தில் பல நாடுகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் விரிவுரைகளை நடத்துவதற்கு அழைக்கப்படுவதுண்டு. அப்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கட்டணங்களைக்கூட மனிதாபிமான நடவடிக்கைகளுக்காகவே ஜிம்மி காட்டர் செலவிட்டிருந்தார். ஜிம்மி காட்டருக்கு மிகவும் பிடித்தமான பணியே வீடற்றவர்களுக்கு

(11ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்லவாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்று வருந்துவீர்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
யாரையும் பரிந்துரை செய்யவேண்டாம். கணவன் - மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. பணம் வாங் கித் தருவதில் குறுக்கேநிற்கா தீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
உங்களுடைய ஆலோசனைகள் எல்லோரும் ஏற்கும் படி இருக்கும். திடீரென்று அறிமுகமாகும் நபரால் பயனடைவீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சாதிக்கும் நாள்.

**கடகம்**
உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றதுடிப்புடன் செயல்படுவீர்கள். வெற்றி கிட்டும் நாள்.

**சிம்மம்**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள் வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்ற வர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
உறவினர் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சந்திராஷ்டமம் இருப்பதால் தன்னம் பிக்கை குறையும். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனதிற்குப் பிடித்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவிவழி உறவினர்கள் மதிப் பார்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் உங்களின் நேரத்தை செல வழிப்பீர்கள். உங்களை சுற்றி உள்ளவர்களில் நல்லவர்கள் யார் என்பதை அறிவீர்கள். உங்களை மதித்துப் பேசுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். புதுவேலை கிடைக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
தடைகளை கண்டு தளரமாட்டீர்கள். புதுவேலை கிடைக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# வவுனியாவில் உளுந்து செய்கையில் மஞ்சள் நோய்த் தாக்கம் அதிகரிப்பு!

வவுனியா, ஜன.09

வவுனியாவில் பிரதான பயிர்ச் செய்கைகளில் ஒன்றாக உளுந்துச் செய்கை காணப்படு கின்ற போதிலும் இம்முறை மஞ்சள் நோய்த் தாக்கத்தால் விளைச்சல் குறைவதற்கான வாய்ப்பு உள்ளதாக விவசாயி கள் கவலை வெளியிட்டுள்ள னர்.

பல ஏக்கர் நிலப்பரப்பில் உளுந்துச் செய்கை மேற்கொள் எப்பட்ட போதிலும் அண்மை யில் ஏற்பட்ட மழை வெள் ளத்துக்கு பின்னரான காலப் பகுதியில் மஞ்சள் நோய்த் தாக் கம் அதிகரித்துள்ளது. இத னால், உளுந்து விளைச்சல் பாதிப்படைந்துள்ளதாக தெரி வித்துள்ள விவசாயிகள் நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்த ஏது வான முறைகள் இல்லை எனவும் கூறினர்.

உளுந்துக்கு விலை நிர்ண யம் இல்லாமையாலும் தாம் செலவு செய்யும் பணத்தை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படும் நிலையில் இவ்வாறு நோய்த் தாக்கங்களும் தொடர்ந்து வருவதனால் தாம் எதிர்வரும் காலங்களில் உளுந்துச் செய் கையை கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (எ- 10)

# நகையை எடுத்து கொடுத்தவர் மீது தாக்குதல் நடத்திய ஐவர் மறியலில்

யாழ்ப்பாணம், ஜன.09

உரும்பிராய் பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில், நிலத்தில் கிடந்த தங்க நகையை எடுத்துக் கொடுத்தவர் மீது தாக்குதல் நடத்திய ஐவர் விளக்கமறிய லில் வைக்கப்பட்டனர்.

தாக்குதலுக்கு உள்ளான நபர் கடந்த 24ஆம் திகதி இவ் வாறு நகையை ஒப்படைத் துள்ளார்.

பின்னர் இரண்டு தடவை கள் அந்த நகை குறித்து விசா ரித்த வேளை அங்கு நின்ற குழு வினரால் தாக்குதலுக்கு உள்ளா கினார். இ

இந்தச் சம்பவமானது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்ட ஐவர் உள்ள டங்கிய குழுவினர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டனர். இவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர் களை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)

# 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஜன.09

விதையனைத்தும் விருட் சமே செயல்திட்டத்தால் மாண வர்களுக்கு கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை பிரதே சத்தில் அமைந்துள்ள கரை பிரான் ஆதிவிநாயகர் ஆல யத்தில் வைத்து 31 மாணவர்களுக்கு இவ்வாறு கற் றல் உபகரணங்கள் வழங்கப் பட்டன.

அமெரிக்காவின் நியூ யோர்க்கில் அமைந்துள்ள சிறீ இராஜ இராஜேஸ்வரி ஆலயத் தின் பீடசீடர்களின் நிதி அனு சரணையில், வன்னிப் பட்டறை உதவிக் கரத்தின் சைதன்ய சேவை ஊடாக இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட் டன. (எ-05)

# வவுனியாவில் கடந்த ஆண்டு மட்டும் 113 பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம்

வவுனியா,ஜன.09

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிராந் திய சுகாதார வைத்திய அதி காரி பணிமனை தெரிவித் துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழை காலங்களில் வெள்ள நீரானது டெங்கு நுளம்பு பெருக்கும் வகையில் தேங்கி நிற்காமல் இருப்பதற்காக சுகா தார பரிசோதகர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக் கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயினால் பாதிப் படைந்தனர். அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட் டிருந்தனர்.

அவர்கள் குணம டைந்து தற்போது வீடுகளுக்கு சென் றுள்ளனர் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-10)

# வாகனம், கற்களை விடுவித்தது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், ஜன.09

சாவகச்சேரியில் பாராளு மன்ற உறுப்பினர் க. இளங்கும ரனால் வழிமறிக்கப்பட்ட சுண் ணக்கல் ஏற்றிய கனகர வாக னத்தை 5 இலட்சம் ரூபாய் பிணை முறியில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் விடுவித் தது.

சாவகச்சேரி பகுதியில் இரவு வேலை கனகர வாகனத்தில் சுண்ணக்கல் ஏற்றிச் செல்லப் படுவதாக தெரிவித்து பாராளு மன்ற உறுப்பினர் இளங்குமரன் குறித்த வாகனத்தை வழிமறித் திருந்தார்.

அப்போது, வாகன சாரதிக் கும் பாராளுமன்ற உறுப்பின ருக்கும் இடையில் குறித்த பொருளை எடுத்துச் செல்வ தற்கான வழி அனுமதிப் பத்தி ரம் தொடர்பில் வாய்த்தர்க்கம் மேற்பட்ட நிலையில் பொலி ஸாரின் தலையீடு காரணமாக குறித்த வாகனம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப் பட்டது.

இந்த நிலையில் நகர்த்தல் பத்திரம் மூலம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது 5 இலட்சம் ரூபாய் பிணை முறியில் வாகனமும் கல்லும் விடுவிக்கப்பட்டது. (எ-05)

# முல்லைத்தீவில் மரையை வேட்டையாடிய சந்தேகநபர் கைது!

முல்லைத்தீவு, ஜன. 09

முல்லைத்தீவு புதுக்குடி யிருப்பு காட்டினுள் அத்துமீறி உள்நுழைந்து மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கி கொண்டிருந்த ஒருவரை புதுக் குடியிருப்பு வனவள பாது காப்பு திணைக் களத்தினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதுக் குடியிருப்பு மன்னகண்டல் ஒதுக்க காட்டினுள் அத்து மீறி நுழைந்து கட்டுத் துவக்கால் மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கும்போது புதுக் குடியிருப்பு பகுதி வன அதிகாரி தலைமையின் கீழ், விசேட அதி ரடிப் படையினர் மற்றும் திணைக்களத்தினரால் சுற்றி வளைப்பு நடவடிக்கை முன் னெடுக்கப் பட்டது.

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளை ஞர் இதன்போது கைது செய் யப்பட்டதோடு மரை இறைச் சியும், மரையை சுடுவதற்கு பயன்படுத்திய கட்டுத் துவக் கும் கைப்பற்றப்பட்டது.

தொடர்ந்து மேலதிக நடவடிக் கைகளுக்காக வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பாதுகாப்பு அமைச்சரே அரிசி மாபியாக்களின் தலைவர்!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 09

**அரிசி மாபியாக்கள் இலாபமடையும் சூழலையே அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க அரிசி மாபியாக்களின் தலைவராக செயற்படுகிறார் என்பதை அச்சமில்லாமல் எம்மால் குறிப்பிட முடியும். அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணய வர்த்தமானியை அரிசி வர்த்தகர்கள் மதிக்கவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரிசி மாபியாக்களுக்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் அரிசி விலையை குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக நாடு அரிசி ஒரு கிலோ கிராம் 230 ரூபாய்க்கு விற்பனை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி பிரசுரித்துள்ளார்.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும் சந்தையில் நான் ஒரு கிலோ கிராம் அரிசியை 240 ரூபாவுக்கு வாங்கினேன். ஜனாதிபதி பிரசுரித்த வர்த்தமானி அறிவித்தலை அரிசி உற்பத்தியாளர்கள் கவனத்திற் கொள்ளவில்லை.

அரிசி இறக்குமதி செய்யப்படும்போது இறக்குமதி வரி குறைக்கப்படும். அப்போது தான் உள்ளூர் சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு அல்லது விலையேற்றத்துக்கு தீர்வு காண முடியும்.

தனியார் துறையினர் அரிசி இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இறக்குமதியின் போது ஒருகிலோ கிராம் அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடப்படுகிறது.

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாடு மற்றும் அரிசி விலையேற்றத்துக்கு தீர்வு காணும் நோக்கம் அரசாங்கத்துக்கு இருக்குமாயின் 65 ரூபா இறக்குமதி வரியை குறைத்திருக்க வேண்டும்.

வரியை அதிகரித்து இறக்குமதி செய்யும் அரிசியின் விலையையும், உள்ளூர் சந்தை அரிசியின் விலையையும் அரசாங்கம் சமப்படுத்தியுள்ளது.

உண்மையில் அரிசி மாபியாக்களின் தலைவர் வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க என்று குறிப் பிடுவதற்கு அச்சமடையப் போவதில்லை-என்றார்.

(அ)

# சீனாவிடமிருந்து பாடசாலை புத்தகப் பைகள் நன்கொடை



கொழும்பு, ஜன. 09

நாட்டின் ஆரம்பநிலைக் கல்வியைத் தொடரும் பிள்ளைகளுக்கான கிராமிய அபிவிருத்திக்கான அறக்கட்டளை மற்றும் அலிபாபா நிறுவனத்தின் உதவியுடன் பாடசாலை உபகரணங்கள் அடங்கிய 5000 பாடசாலை பைகள் நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் குறித்த பாடசாலை பைகளை கல்வி மற்றும் உயர் கல்வி பிரதியமைச்சர் வைத்தியர் மதுர செனவிரத்னவிடம் நன்கொடையின் அடையாளமாக கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வியமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ உள்ளிட்ட அதிகாரிகளும் கிராமிய அபிவிருத்திக்கான சீனக் அறக் கட்டளையின் உதவிப் பணிப்பாளர் பங்கேற்றிருந்தனர்.

(அ)

# போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் கைது!

கொழும்பு, ஜன. 09

97 மில்லியன் ரூபா பெறுமதியான கொக்கெய்ன் போதைப் பொருடன் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

66 வயதான பொஸ்னியா பிரஜை ஒருவர் நேற்றுக் காலை விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் கொலம்பியாவில் இருந்து போதைப்பொருள் கையிருப்புடன் கட்டாரின் டோஹாவுக்கு பயணித்துள்ளார்.

அங்கிருந்து நேற்று அதிகாலை 02.40 மணியளவில் கட்டார் எயார்வேஸ் விமானமான கியூ. ஆர்-662 மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பொஸ்னியா பிரஜையுடன் கைப்பற்றப்பட்ட கொக்கேய்ன் போதைப்பொருள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# 2024 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 09

2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீட்டுப்பணிகள் நேற்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் 40 நாட்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு முன்னர், பகுதி 01 இல் காணப்பட்ட மூன்று வினாக்கள் வெளியானமையை அடுத்து ஏற்பட்ட பாரிய சர்ச்சையால் விடைத்தாள் திருத்தும் பணிகள் இடைநிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(அ)

# டிஜிற்றல் மயமாக்கல் குறித்து ஜனாதிபதி நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சு!

கொழும்பு, ஜன. 09

மோட்டார் வாகன இறக்குமதி, வரி மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் ஜனாதிபதிக்கும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும் பிரஜைகளுக்கான சலுகைகளை அதிகளவில் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் அர்ப்பணிக்கும் என ஜனாதிபதி தெரிவித்தார்

அத்துடன் மோட்டார் வாகன இறக்குமதி, நிறுத்தி வைத்தல் வரி மற்றும் வற் வரி சேகரிப்பு, டிஜிற்றல் மயமாக்கல் தொடர்பிலான பிரச்னைகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கைக்கு வாகன இறக்குமதி செய்யப்படும் போது முகம் கொடுக்க வேண்டியுள்ள சவால்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், நாட்டுக்குள் காணப்படும் நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார முன்னுரிமைகளை கருத்



தில் கொண்டு இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

வருமான வரிக்கு உட்படாத ஓய்வூதியதாரர்களிடம் அறவிடப்படும் நிறுத்தி வைத்தல் வரியை அவர்களுக்கு மீளப் பெற்றுக்கொடுப்பதற்கான எளிமையான முறைமையொன்றை அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அத்தோடு செயற்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்த பெறுமதி சேர் வரி சேகரிப்பு செயற்பாடுகளை டிஜிற்றல் மயமாக்க வேண்டிய அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, வரி இணக்கம் மற்றும் வரி வருமானம் ஈட்டுதல் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்குடன், விரிவான டிஜிற்றல் முறையை விரைவில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் இதன்போது சாதகமான விடயங்களை குறிப்பிட்ட ஜனாதிபதி, நாடு சுமூகமான நிலைக்குத் திரும்பி படிப்படியாக ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்வதாகவும், தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை அதிகப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

(அ)

# நுவரெலியாவில் கண் சத்திர சிகிச்சையால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இழப்பீடு!

கொழும்பு, ஜன. 09

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சைக்கு பின் சிக்கல்களுக்கு உள்ளான நோயாளர்களுக்கு இழப்பீடு வழங்க தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அமைச்சர், இவ்வாறு 17 நோயாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட நோயாளர்களில் சிலர் முழுமையாக கண் பார்வை இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அந்த அறிக்கையின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கான இழப்பீட்டு முறை ஏற்படுத் தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்த விக்கிரமதுங்க படுகொலைக்கு இப்போதாவது நீதி நிலைநாட்டுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

கொழும்பு, ஜன. 09

**சிரேஷ்ட ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்தக் கொலைக்கான மூல காரணத்தையும், கொலைகாரர்களையும் இதுவரை எந்த அரசாங்கத்தாலும் கண்டுபிடிக்க முடியாது போயுள்ளன. இவ்விவகாரத்தை அவரது மகள் அஹிம்சா விக்கிரமதுங்க ஐக்கிய நாடுகள் சபையிடம் எடுத்துச் சென்றுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அத்துடன், சிரச ஊடக வலையமைப்பின் மீதான கொடூரத் தாக்குதல் இடம் பெற்று 16 வருடங்கள் கடந்துள்ளன. லசந்த விக்கிரமதுங்க மற்றும் ராஜமகேந்திரன் ஆகியோர் நீதி மற்றும் நியாயத்திற்காக முன் நின்றார்கள். லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் உண்மையைக் கண்டறிந்து நீதியை நிலைநாட்டுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார். (அ)

# சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட பந்துக்குள் போதைப்பொருள்!

கொழும்பு, ஜன. 09

காலி சிறைச்சாலைக்குள் வீசப்பட்ட ரென்னிஸ் பந்து ஒன்றிலிருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக காலி பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாத நபரொருவர் நேற்று முன்தினம் மாலை காலி சிறைச்சாலையின் கூரை வழியாக ரென்னிஸ் பந்து ஒன்றை சிறைச்சாலைக்குள் வீசியுள்ளார்.

இதனை அவதானித்த சிறைச்சாலை அதிகாரிகள் சிலர் டென்னிஸ் பந்தை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, ரென்னிஸ் பந்துக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 20 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொலிஸ் அதிகாரிகள் 11 பேருக்கு இடமாற்றம்

கொழும்பு, ஜன. 09

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 11 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் பணிப்புரைக்கு அமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.வி.கினிகே குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பு வழங்கல் பிரிவின் பணிப்பாளர் பதவியில் இருந்து மாத்தறைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக மாற்றப்பட்டுள்ளார். (அ)

# லசந்த படுகொலையின் 16ஆவது ஆண்டு நினைவு தினம் கொழும்பில் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஜன. 09

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபகரும் ஆசிரியருமான லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 16 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

பொரளை பொதுமயானத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் லசந்த விக்கிரமதுங்கவின் குடும்பத்தார், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷ டி சில்வா, ரவி கருணாநாயக்க ஆகியோர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர்.

ஹர்ஷ டி சில்வா தெரிவிக்கையில்-எனது நண்பர் லசந்த படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 16 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. அவரது கொலைக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தொடர்பில் கண்டறியுமாறு நாம் கடந்த அரசாங்கங்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து வந்தோம்.

இப்போதாவது, லசந்தவை கொலை செய்தவர்கள் யார்? அதற்கான காரணம் என்ன? என்பதை வெளிக்கொண்டு வருவதுடன் கொலையாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கிறோம்.

லசந்த மாத்திரமல்ல உண்மையை பேசுவதற்கு துணிந்த எத்தனையோ ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். லசந்த உள்ளிட்ட நாட்டு மக்களுக்காக குரல்கொடுத்தோரை கொலைசெய்த நபர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும்-என்றார்.

ரவி கருணாநாயக்க தெரிவிக்கையில்-லசந்த கொலை செய்யப்பட்ட பின்னர் நான்கு அரசாங்கங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருந்தன.

எனினும் குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு நிறைவேற்று அதி காரம் இருந்தும் கூட அவருக் கும் நீதியை நிலைநாட்ட முடியாமல் போனது.

லசந்தவின் கொலையுடன் தொடர்புடையோருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)

# இஸ்ரேலிய மத தலங்களை அமைக்க அனுமதி இல்லை

கொழும்பு, ஜன. 09

இஸ்ரேலிய மதத் தலங்களையோ அல்லது அதுபோன்ற இடங்களையோ நிர்மாணிப்பதற்கு எந்தவொரு அரசாங்க நிறுவனமும் இதுவரை அனுமதி வழங்கவில்லை என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுவரை, புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு அல்லது அதன் எந்தவொரு திணைக்களமும் இஸ்ரேலியப் பிரஜைகளால் மத ஸ்தலங்களையோ அல்லது அதுபோன்ற இடங்களையோ நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கவில்லை.

எனினும், இவ்வாறான நிலையங்கள் பராமரிக்கப்படுவதை நாம் அறிவோம். அவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்று நிலைமையை அவதானித்துள்ளோம். அதேநேரம், இந்தப் பிரச் னைக்கு தீர்வு காண வெளியுறவு அமைச்சு தலையிட்டு வருவதா கவும் அவர் மேலும் கூறினார்.

எவ்வாறெனினும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரேலியர்களுக்கான மத மற்றும் கலாச்சார மையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக முஜிபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தினார்.

இதுபோன்ற இடங்களில் பாதுகாப்புக்காக பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# மோட்டார் வாகனப் பரிசோதகரின் சோதனைக்கு உட்படவுள்ள பஸ்கள்!

கொழும்பு, ஜன. 09

பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களை மோட்டார் வாகன பரிசோதகர்களின் ஊடாக சோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருடனான கூட்டு வேலைத்திட்டமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை முதல் குறித்த விசேட வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

இதன்போது பஸ்களில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அபாயகரமான பொருத்துக்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்படுமென அவர் கூறினார்.

இதனிடையே, முன்னெடுக்கப்படும் போக்குவரத்து செயற்றிட்டம் எவ்விதத்திலும் நிறுத்தப்பட மாட்டாதென பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென பொலிஸார் கூறினர். (அ)

# நாட்டில் குரங்குகளின் அதிகரிப்புக்கு மனிதர்களின் செயற்பாடே காரணம்

## சூழலியல் நிபுணர் மெண்டிஸ் விக்ரமசிங்க

கொழும்பு, ஜன. 09

நாட்டில் மனிதர்களால் அதிகளவான உணவுகள் சூழலுக்கு விடுவிக்கப்படுகின்றமை குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிப்பில் தாக்கம் செலுத்தியுள்ளதாக சூழலியல் நிபுணர் மெண்டிஸ் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்கு இது தொடர்பில் கருத்துரைத்த அவர்- பாரியளவில் உணவு விரயமாவதால் குரங்குகளின் தொல்லை ஏற்பட்டுள்ளது.

உணவுக் கழிவுகள் தொடர்ந்தும் அதிகளவில் விடுவிக்கப்படும் உணவகங்கள், முக்கிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அருகில் குரங்குகளின் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது.

குரங்குகள் புத்திசாலித்தனமான உயிரினம் என்பதுடன் சூழலுக்கு ஏற்றவகையில் விரைவில் தங்களை மாற்றியமைக்கும் திறன் கொண்டவையாகும்.

குரங்குகளின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்துவதில் இயற்கையான உணவு சமநிலை முக்கிய பங்கு வகிக்கின்றது.

காடுகளில் கிடைக்கப்பெறும் உணவுகளுக்கு அமைய இனப்பெருக்க சுழற்சி இடம் பெறுகின்றது.

எனினும் நகர்ப்புற பகுதிகளில் குரங்குகளுக்குக் கிடைக்கப் பெறும் உணவுகளுக்கு அமைய, இனப்பெருக்க அதிர்வெண் அதிகரிக்கிறது-என்றார். (அ)

# உள்ளூராட்சி தேர்தலில் மக்கள் அரசுக்கு எச்சரிக்கை சமிக்ஞை!

கொழும்பு, ஜன. 09

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை சமிக்ஞையை நாட்டு மக்கள் வழங்குவார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்காக பெறப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்து, புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான சட்டத்திருத்தம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என தெரிய வருகின்றது.

அதன்பிறகு மார்ச் மாதமளவில் தேர்தல் நடைபெறும் என நம்புகின்றோம். அத்தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

நாட்டு மக்கள் தற்போது உண்மையை உணர்ந்துள்ளனர். எனவே, உள்ளாட்சி தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அதற்கான சமிக்ஞையை மக்கள் வெளிப்படுத்துவார்கள்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் போக்குவரத்தில் நிலவும் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



கொழும்பு, ஜன. 09

**நாட்டின் பொதுப் போக்குவரத்து கட்டமைப்பில் உள்ள அடிப்படை பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் கிளீன் சிறிலங்கா என்ற வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதனூடாக நாட்டின் சில விடயங்கள் மேலோட்டமாக சுத்தப்படுத்தப்படுகிறதே தவிர அடிப்படை பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை.

முதலாவதாக பொதுப் போக்குவரத்து ஒழுங்கமைக்கப்பட வேண்டும். பஸ்கள், ரயில்கள், முச்சக்கர வண்டிகள் என அனைத்தும் டிஜிற்றல் மயமாக்கப்பட வேண்டும். நாம் இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அதனை முறைப்படி கொண்டுசெல்ல வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

வெறுமனே பஸ்களில் அவசியமற்ற கம்பிகளை கழற்றுவதும் புத்தர் சிலைகளை அகற்றுவதும் சிறந்த வேலைத்திட்டமாக அமையாது. அதனால் பஸ் உரிமையாளர்களுடன் முரண்பாடுகளே அதிகரிக்கும்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலை நோக்கமாகக் கொண்டு ஏமாற்றும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கக் கூடாது. அவ்வாறாயின் கோட்டாபயவுக்கு ஏற்பட்ட நிலைமைதான் மீண்டும் உருவாகும் என்பதை அரசாங்கம் மறக்கக் கூடாது - என்றார். (அ)

# போலி கச்சேரி சிக்கியது

கொழும்பு, ஜன. 09

கண்டி பிரதேசத்தில் இயங்கி வந்த போலிக் கச்சேரி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கண்டி தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அநுராதபுரம், மீகலேவ மற்றும் ஹூரிகஸ்வெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

சந்தேக நபர்களிடமிருந்து, போலியாகத் தயாரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்கள், பிறப்பு சான்றிதழ்கள் , தேசிய அடையாள அட்டைகள், கல்வி சான்றிதழ்கள், காணி உறுதிப் பத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மூவரும் கண்டி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் போலி ஆவணங்களை விற்பனை செய்து பணம் சம்பாதித்து வந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# சமூக வலைத்தளங்கள் மூலம் மோசடியான செயல்பாடுகள்!

கொழும்பு, ஜன. 09

சமூக வலைத்தளங்கள் மூலம் அனுப்பப்படும் போலியான குறுஞ்செய்திகளுக்கு தங்களது தனிப்பட்ட தகவல்களை வழங்குவதை தவிர்க்குமாறு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ஜனாதிபதி ஊடாக 50,000 ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் போலியான குறுஞ்செய்திகள் வெளியிடப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இது தொடர்பான குறுஞ்செய்திகளுக்கு தமது தனிப்பட்ட தகவல்களை வழங்குவதை தவிர்க்குமாறு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் மேனகா பத்திரன தெரிவித்துள்ளார். (அ)

# சுற்றுலா வீஸாவில் நாட்டுக்கு வந்து வியாபாரம் செய்ய அனுமதியில்லை

## முஜிபுர் எம்.பியின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர்

கொழும்பு, ஜன. 09

சுற்றுலா விஸாவில் நாட்டுக்கு வருகை தந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதறகான அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் இன்று சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போது எதிர்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானால் எழுப்பப்பட்ட வாய் மூல வினாவுக்கான கேள்வி நேரத்திலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நடைமுறையிலுள்ள வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாக நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலையில் உள்ளது. சுற்றுலா விஸாவில் நாட்டிற்கு வருகை தந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அனுமதி இல்லை.

எது எவ்வாறாக இருப்பினும் இஸ்ரேலிய பிரஜைகள் மாத்திரம் அல்ல. வெவ்வேறு நாடுகளிலிருந்து சுற்றுலா விஸாவில் வருகை தந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமை தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. வெளிவிவகார அமைச்சின் தலையீட்டின் ஊடாக அதனை எவ்வாறு தடுப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது - என்றார். (அ)

# சுவாச நோய்களுக்கு உள்ளாவோர் நாட்டில் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 09

நாட்டில் சமீப காலமாக சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் அஸ்மா மற்றும் காச நோயாளிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுவாச நோய் நிபுணர் வைத்தியர் நிரஞ்சன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் நோய்கள் பரவி வருவதனால் குழந்தைகளின் ஆரோக்கியம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென சுகாதார அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (அ)

# பாராளுமன்றில் உரையாற்ற எனக்கும் நேரம் ஒதுக்குங்கள்

## உடனடித் தீர்வை கோருகிறார் அர்ச்சுனா

கொழும்பு, ஜன. 09

பாராளுமன்றில் தமக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தொடர்ந்தும் சிக்கல் நிலவுவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று இரண்டாவது முறையாகவும் சபையில் தெரிவித்தார்.

நேற்று முன்தினமும் இந்த விடயம் தொடர்பில் அவர் பாராளுமன்றில் உரையாற்றியிருந்தார்.

சபாநாயகர் இந்த விடயத்தில் தலையிட்டு உடனடியாக தீர்த்து வைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே நேற்றும் சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகரிடமும் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் தமக்கு உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

தமக்கு நேரம் வழங்குவது தொடர்பில் குழு ஒன்றை நியமித்து கலந்துரையாடப்படும் என சபாநாயகர் நேற்று முன்தினம் உறுதியளித்ததை இராமநாதன் அர்ச்சுனா நேற்றைய பாராளுமன்ற அமர்வின் போது நினைவுபடுத்தியிருந்தார்.

ஒவ்வொரு பாராளுமன்ற அமர்வின்போதும் தாம் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்து இருக்கையில் அமர்ந்து மேலே பார்த்துக் கொண்டு மீண்டும் சென்று விடுவதாக நேற்றும் அவர் தெரிவித்திருந்தார்.

எனவே தாம் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இராமநாதன் அர்ச்சுனா வலியுறுத்தினார். தயவு செய்து இந்த விவகாரம் தொடர்பில் தமக்கு விரைவாக பதில் வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி ,இந்த பிரச்னை தொடர்பில் நிச்சயமாக சபாநாயகர் தமது கருத்தைத் தெரிவிப்பார் எனவும் நிச்சயமாக தனிப்பட்ட முறையில் எடுத்துரைப்பதாகவும் தெரிவித்தார்.

# சிவப்பு அரிசிக்கான தட்டுப்பாடு சந்தையில் தீவிரமடைந்துள்ளது!

## டி.வி.சானக சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 09

கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக மேலதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்து ஒரு தரப்பினர் 654 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர். சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் தோல்வியடைந்துள்ளன .இதுவே உண்மை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை -2024 தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சந்தையில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.

சந்தையில் சிவப்பு அரிசி தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது. அரிசி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்துக்கு கடந்த அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்ற அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் குறிப்பிடுகிறது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட மாதாந்த விலை விவரம் தொடர்பான அறிக்கையை கொண்டு அரசாங்கத்துக்கு பதிலளிக்கவேண்டும்.

இதற்கமைய கடந்த ஓகஸ்ட் மாதம் சிவப்பு அரிசி ஒரு கிலோகிராம் 210 ரூபாவுக்கும், செப்டெம்பர் மாதம் 210 ரூபாவுக்கும் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. கடந்த மாதம் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் இந்த மாத விலை படிவத்தில் சிவப்பு அரிசியின் விற்பனை விலை குறிப்பிடப்படவில்லை, ஏனெனில் சந்தையில் சிவப்பு அரிசி இல்லை .இதுவே உண்மை.

அரசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் 240,250 ரூபா என்ற அடிப்படையில் தான் சந்தையில் அரிசி விற்பனை செய்யப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமான விலைக்கு அரிசி விற்பனை செய்து ஒரு தரப்பினர் கடந்த மாதம் மாத்திரம் 467 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர்.

அதேபோல் 85 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசியும் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக மேலதிகமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனூடாகவும் ஒரு தரப்பினர் 187 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர். ஆகவே அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்து 654 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர். இது தான் உண்மை - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருகலில் மக்கள் போராட்டம்

# தொல்லியல் திணைக்களத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு!

வெருகல், ஜன.09

**தொல்லியல் திணைக்களத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தும் வெருகலில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் "ஒரு கிலோமீற்றர் வட்டவான் தொல்லியல் நிலையம்" என குறிப்பிட்டு பெயர் பதாகை ஒன்று நடப்பட்டுள்ளது.**



இதற்கு அருகில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 160 ஏக்கர் வயல்காணி உள்ளது.

இந்த நிலையில் குறித்த பகுதி மக்கள் நேற்றுக்காலை தொல்லியல் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்திலிருந்து வெருகல் பிரதேச செயலகம் வரை நடைபவனியாகச் சென்று கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதனால் திருகோணமலை - மட்டக்களப்பு வீதியில் சிறிது நேரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

அத் தோடு, வெருகல் பிரதேச செய லாளரிடம் மகஜரொன்றையும் மக்கள் கையளித்தனர். (எ)

# திருவெம்பாவை ஊர்வலம்



காரைதீவு, ஜன.09

இந்துக்களின் திருப்பள்ளி எழுச்சி திருவெம்பாவை ஊர்வலமானது இம்முறையும் காரைதீவில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில், நேற்றுப் புதன்கிழமை திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமானது கண்ணகி அம்மன் ஆலயத்தில் அதிகாலை 4 மணியளவில் ஆரம்பமாகி காரைதீவு சிறீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தை 5. 30 மணிக்கு சென்றடைந்து, அங்கு திருவெம்பாவை பாடுதலுடன் நிறைவடைந்தது. (எ)

# மனைவி மீது வாள்வெட்டு கணவன் பொலிஸில் சரண்

## கிண்ணியாவில் சம்பவம்

திருகோணமலை, ஜன.09

கணவன் - மனைவி இடையே வாக்குவாதம் முற்றியதில் வாள்வெட்டுக்கு இலக்கான மனைவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை, கிண்ணியாவில் நேற்று அதிகாலை 2. 30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குடும்பப் பிரச்னை காரணமாக இருவரும் கடந்த 6 மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருவதோடு, கடந்த ஞாயிற்றுக்கிழமை காதி நீதிமன்றம் சென்று வந்தனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலை மனைவி உறங்கிக் கொண்டிருக்கும் வேளை கதவை உடைத்து உள்நுழைந்து தாக்குதல் நடத்தி விட்டு கணவன் பொலிஸில் சரணடைந்தார்.

வாள்வெட்டுக்கு இலக்கான மனைவி கிண்ணியா தள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மாநகர களப் பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சல் பற்றி விழிப்பூட்டல்

அக்கரைப்பற்று, ஜன.09

நாடளாவிய ரீதியில் பரவி வரும்எலிக்காய்ச்சல் நோய் தொடர்பில் அக்கரைப்பற்று மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப் பணியாளர்களை தெளிவூட்டுவதற்காக அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் நடைபெற்றது.



இதன் போது, எலிக்காய்ச்சல் பரவும் வழிமுறைகள் மற்றும் அதற்கான சூழல்கள் பற்றியும் எலிக்காய்ச்சலில் இருந்து பாது காப்பு பெறுவதற்காக கடைப் பிடிக்க வேண்டிய சுகாதார ஒழுங்கு முறை கள் தொடர்பி லும் விவரிக் கப்பட்டு, அறிவுரைகள் வழங் கப்பட்டன.

அத்துடன், சுகாதாரத் தொழிலாளர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்களுக்கு எலிக்காய்ச்சலுக்கான தடுப்பு மாத்திரையும் வழங்கப்பட்டது. (எ)

# 18 மாதத்தில் 2000 பேருக்கு இலவச இருதய சிகிச்சை!




மட்டக்களப்பு, ஜன.09

மட்டக்களப்பு கிரான் குளத்தில் அமைந்துள்ள சிறீ சத்திய சாய் சஞ்சீவனி வைத்திய சாலை கடந்த 18 மாதங்களில் 2000 பேருக்கு இருதய சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக செய்துள்ளது. இதேவேளை தற்போது இலவச இருதய மாற்று சத்திர சிகிச்சைக்கூடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரியதொரு வரப்பிரசாதமாகும்.இதன் அடுத்த கட்டமாக இருதய மாற்று அறுவை சிகிச் சைகளை மேற்கொள்வதற்கான சத்திர சிகிச்சைக் கூடம் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு என்பன இவ் வைத்திய சாலை யின் நிறுவுநர் சற்குரு. மதுசூத னன் சாயால் திறந்து வைக்கப் பட்டது.


இந்த நிகழ்வில் கிரிக்கெட் ஜாம்பவான்களான அரவிந்த டி சில்வா, முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ, அஜந்த மெண்டிஸ் மற்றும் இவ் வைத்தியசாலையின் இலங்கை தலைமை அதிகாரி பென்னி ஜெயவர்த்தன, வைத்தியசாலை பணிப்பாளர் ரமேஸ் ராவ் இவ் வைத்திய சாலையின் பொது முகாமையாளர் டேவிட் சில்வஸ்டர் மற்றும் இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர்களான டீபால் விக்கிரமசிங்க, சுதர்சனம் தர்மரெட்ணம், நிசாந்த ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.(எ)

# சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025- 2027 தொடர்பில் கருத்தரங்கு

மருதமுனை, ஜன.09

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025- 2027 தொடர்பான கருத்தரங்கு நேற்று மருதமுனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு சமூக வலுவூட்டல் அமைச்சு ஏற்பாட்டில் கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ. ஆர். எம். சாலிஹ் தலைமையில் நடைபெற்றது.



இதன்போது, கல்முனை பதில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ரி.எம்.எம். அன்சார் குறித்த கருத்தரங்கு தொடர்பில் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து குறித்த கருத்தரங்கின் வளவாளரான சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம். எம். நௌசாத் பல்வேறு விளக்கங்களை வழங்கினார். (எ)

# ஊழியர் பிரச்னைகள் குறித்து ஆளுநருடன் கலந்துரையாடல்

திருகோணமலை, ஜன.09

இலங்கை கல்வி சாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் நிருவாகத்தினருக்கும் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி சாரா ஊழியர்களின் பதவி உயர்வு, அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும் கல்வி சாரா ஊழியர்களின் எதிர்கால செயல்பாடுகள் பற்றியதுமான விசேட கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்னசேகர, இலங்கை கல்விசாரா ஊழியர் ஒன்றிணைந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் ஏ.கே. டபிள்யூ. விஜேசேகர, சங்கத்தின் உதவித் தலைவர் என்.எம். பௌசான் மற்றும் சங்கத்தின் உதவிச்செயலாளர் எம்.ஜே.எம். சஜீத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திபெத்தில் பயங்கர நிலநடுக்கம் 125 பேர் பலி! 200 பேர் படுகாயம்

புதுடில்லி,ஜன.09

**திபெத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் காரணமாக 126 பேர் உயிரிழந்தனர். மேலும், 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்த நிலநடுக்கம் இந்தியாவின் டில்லி, பீஹார் மாநிலங்களிலும் உணரப்பட்டது.**

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லைப் பகுதியையொட்டி நேற்று முன்தினம் காலை 6. 35 மணியளவில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. திபெத்தில் உள்ள மலைப்பகுதியில் சுமார் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையப்புள்ளி இருந்தது.

இதனால் திபெத், நேபாள நாடுகள் குலுங்கின. இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 7.1 ஆக பதிவானது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கம் திபெத்தின் ஜிசாங்க் பகுதியை மையமாகக் கொண்டு ஏற்பட்டதால் அப்பகுதியில் கடுமையான சேதம் ஏற்பட்டது. இங்கு வசிக்கும் மக்கள் கடும் பீதி அடைந்தனர். கட்டடங்கள் குலுங்கியதால் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். (எ)

# இஸ்ரோவின் தலைவராக நாராயணன் நியமனம்

புதுடில்லி, ஜன.09



இஸ்ரோவின் புதிய தலைவராக வி. நாராயணனை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் (இஸ்ரோ) தலைவராக தற்போது சோம்நாத் உள்ளார். இவரது பதவிக்காலம் விரைவில் முடிவடையவுள்ளது. இந்த நிலையில், இஸ்ரோவின் புதிய தலைவராக வி. நாராயணனை மத்திய அரசின் நியமனக்குழு நியமனம் செய்துள்ளது.

இஸ்ரோவின் அடுத்த தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள வி. நாராயணன், கன்னியாகுமரி மாவட்டத்தை பூர்வீகமாக கொண்டவர். எதிர் வரும் 14ஆம் திகதி இஸ்ரோ தலைவராக வி. நாராயணன் பொறுப்பேற்கவுள்ளார். 2 ஆண்டுகள் வரையில் இந்தப் பதவியில் அவர் இருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கு சுற்றுலா பயணிகளுக்குத் தடை!

## சீன அரசாங்கம் உத்தரவு

பீஜிங், ஜன.09

நிலநடுக்கம் எதிரொலியாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதித்து சீன அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லையையொட்டி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் காரணமாக உலகின் மிக உயரமான சிகரமாக விளங்கும் எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியிலும் நிலஅதிர்வு ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் திங்ரி முகாமில் இருந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் ஆகியோருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், அனைவரும் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம், திங்ரியில் அமைந்துள்ள சீன அறிவியல் அகடமியின் வளிமண்டல மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிலையத்தில் நிலநடுக்கத்தால் சிறிது நேரம் மின்தடை ஏற்பட்டதாகவும், அதுதவிர வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், நிலநடுக்கத்தை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை விதித்து சீன அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# 20ஆம் திகதிக்குள் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

## ஹமாஸுக்கு ட்ரம்ப் கெடு விதிப்பு மத்திய கிழக்கில் நரகம் வெடிக்கும்

வாஷிங்டன், ஜன.09

எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் பணய கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென ஹமாஸுக்கு அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப் கெடு விதித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இம்மாதம் 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். அவர் ஜனாதிபதியாக பதவியேற்க முன்னர் இஸ்ரேல், ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு பணயக் கைதிகள் மீட்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், 20ஆம் திகதிக்குள் பணயக் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென ஹமாஸுக்கு ட்ரம்ப் கெடு விதித்துள்ளார்.



இது தொடர்பில் ட்ரம்ப் கூறுகையில்,“20ஆம் திகதி நான் பதவியேற்கும் முன் ஹமாஸ் பணய கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அமைதிப் பேச்சுக்கு நான் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனால், பணயக் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை யென்றால் மத்திய கிழக்கில் நர கம் வெடிக்கும்”- என்றார். (எ)

# அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் பகவத் கீதைமீது பதவிப்பிரமாணம்

வாஷிங்டன், ஜன.09

அமெரிக்க பாராளுமன்றத்துக்கு, விர்ஜீனியாவில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுஹாஷ் சுப்பிரமணியம், பகவத் கீதை மீது பதவிப் பிரமாணம் எடுத்து கொண்டார்.


அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடந்து முடிந்தது. இதில், பெரும்பான்மையான இடங்களை முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சி கைப்பற்றியது. ட்ரம்ப் எதிர்வரும் 20ஆம் திகதி அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில், அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்து கொள்ளும் நிகழ்ச்சி நடந்து வருகிறது. இதில், கிழக்கு கடற்கரையில் இருந்து சென்று



பகவத் கீதை மீது பதவிப் பிரமாணம் எடுத்த முதல் இந்திய - அமெரிக்கப் பிரதிநிதி என்ற பெருமையை சுஹாஷ் சுப்பிரமணியம் பெற்றுள்ளார். (எ)

# வெள்ளக்காடானது மெக்கா நகரம்



ரியாத்,ஜன.09

சவுதி அரேபியாவின் மெக்கா நகரத்தில் தொடர்ந்து பெய்த கனமழையால் வீதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இதனால் அங்கு இயல்புநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் புனித நகரங்களான மெக்கா மற்றும் மதீனாவில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால், வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பேருந்துகள், கார்கள் நகர முடியாமல் வரிசைக் கட்டி நிற்கும் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

ஜித்தா நகரத்திலும் பல பகுதிகளை வெள்ளம் சூழந்து இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் நடவடிக்கையை சவுதி அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

மெக்கா, மதீனா, ஜித்தா நகரங்களுக்கு சவுதி வானிலை மையம் சிவப்பு அறிவித்தல் விடுத்துள்ளது. சவுதி தலைநகர் ரியாத், அல்-பஹா, தபுக் உள்ளிட்ட நகரங்களும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, இந்த வாரம் முழுக்க கனமழை தொடரும் என்று வானிலை மையம் எச்சரித்துள்ளது. மோசமான வானிலை காரணமாக ஜித்தா விமான நிலையத்தில் பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. மெக்காவில் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஏஐ தொழில்நுட்ப உதவியுடன் இந்தியாவில் கரும்பு செய்கை

புதுடில்லி,ஜன.09

இந்தியாவின் மகாராஷ்டிராவின் பாராமதி பகுதியில் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப உதவியுடன்(ஏஐ) விவசாயிகள் கரும்பு விவசாயத்தை மேற்கொண்டுள்ளனர். இது நல்ல பலனை அளித்து வருவதாக விவசாயிகள் கூறினர்.

மகாராஷ்டிராவின் பாராமதி தொகுதியில் உள்ளது நிம்புட் கிராமம். இங்குள்ள சுரேஷ் ஜெகதாப் என்ற விவசாயி பல ஆண்டு காலமாக தனது நிலத்தில் காய்கறி மற்றும் பழங்களை விவசாயம் செய்து வந்தார்.

இங் குள்ள வேளாண் மேம்பாட்டு அறக்கட்டளையில் உள்ள விஞ்ஞானிகள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கரும்பு விவசாயிகளுக்கு வேண்டிய தகவலை வழங்கி வருகின்றனர். இதனால் சுரேஷ் ஜெகதாப் ஏஐ தொழில் நுட்ப உதவியு டன் கரும்பு விவசாயத்தில் இணைந்துள்ளார். அதில் வெற்றியும் அடைந்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அசத்தல் வெற்றி!

### ஒருநாள் தொடரையும் பறிகொடுத்தது இலங்கை




ஹாமில்டன், ஜன.09

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து 9 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் நியூசிலாந்து 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 37 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 255 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையால் 142 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்து ஒருநாள் தொடரையும் இழந்தது. ஏற்கனவே, இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற ரி - 20 தொடரில் 2 - 1 என்ற கணக்கில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. (எ)

*18 வருடங்களுக்கு பிறகு*

## பாகிஸ்தான் சென்றது மேற்கு இந்திய தீவுகள்

கராச்சி, ஜன.09

18 வருடங்களுக்குப் பிறகு மேற்கு இந்திய தீவுகள் அணி பாகிஸ்தானுக்குச் சென்றது.

கிரெய்க் பிராத்வெயிட் தலைமையிலான மேற்கு இந்திய தீவுகள் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் சென்றடைந்தது. கடைசியாக 2006ஆம் ஆண்டு மேற்கு இந்திய தீவுகள் அணி பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியிருந்தது.

இரு அணிகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி வரும் 17ஆம் திகதி முல்தான் நகரில் தொடங்குகிறது. கடைசி மற்றும் 2ஆவது டெஸ்ட் போட்டி இதே மைதானத்தில் 25ஆம் திகதி நடைபெறுகிறது. முன்னதாக மேற்கு இந்திய தீவுகள் அணி 3 நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டத்தில் விளையாடவுள்ளது. இந்த ஆட்டம் நாளை 10ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் தொடங்குகிறது.

இரு அணிகளுமே ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறவில்லை. (எ)

## ஆஸியை எப்படி வீழ்த்துவது என்று தென்னாபிரிக்காவுக்குத் தெரியும்

### வேகப்பந்து வீச்சாளர் ரபாடா தெரிவிப்பு



கேப்டவுன், ஜன.09

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன. இந்த நிலையில், அவுஸ்திரேலியாவை எப்படி வீழ்த்துவது என எங்களுக்குத் தெரியும் என்று வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா தெரிவித்தார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 11 - 15 வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், ரபாடா மேலும் கூறுகையில், உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி இன்னும் தொலைவில் இருக்கக்கூடிய ஒரு விடயம். ஆனால், இப்படியான ஒரு இறுதிப் போட்டி மிகப்பெரிய நிகழ்வு. எனவே, அது உங்களை தூண்டவே செய்யும்.

தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையில் எப்போதும் கடுமையான போட்டி இருந்து வருகிறது. ஏனென்றால் நாங்கள் கிரிக்கெட்டை ஒரே மாதிரி விளையாடுகிறோம். நாங்கள் கடினமாக விளையாடுகிறோம். எனவே, அவர்கள் எங்களிடம் மிகக் கடினமாக மோத வருவார்கள் என்று எங்களுக்குத் தெரியும். 100 சதவீதம் டெஸ்ட் கிரிக்கெட் உயிருடன் இருக்கிறது. நாங்கள் தொடர்ந்து டெஸ்ட் கிரிக்கெட் விளையாடி வருகிறோம்.

எங்களுடைய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், எங்களுடைய ஜாம்பவான் வீரர்கள் அனைவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் மிகவும் சிறந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். மேலும், பாகிஸ்தான் அணிக்கு எதிராக நாங்கள் உள்நாட்டில் விளையாடிய டெஸ்ட் தொடர் சிறந்த விளம்பரமாக அமைந்தது. அவுஸ்திரேலியா அணியை எப்படி வீழ்த்துவது? என்று எங்களுக்குத் தெரியும்- என்றார்.(எ)

## ஆப்கானிஸ்தானுடன் விளையாடக் கூடாது!


### கோரிக்கை நிராகரிப்பு

லண்டன், ஜன.09

ஆப்கானிஸ்தான் அணியுடன் விளையாடக் கூடாது என்று அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கையை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிராகரித்தது.8 அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி தொடங்கி மார்ச் 9ஆம் திகதி வரை நடக்கிறது. இந்தத் தொடருக்கான அணிகளை வரும் 12ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும் என ஐ. சி. சி. தெரிவித்துள்ளது. இந்தத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதி ரான போட்டியில் இங்கிலாந்து அணி விளையாடக் கூடாது என 160இற்கும் அதிகமான இங்கிலாந்து அரசி யல்வாதிகள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், ஆப்கானிஸ் தானில் பெண்கள் உரிமைகள் மீதான தலிபான் ஆட்சி யின் தாக்குதலுக்கு எதிராக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் எனவும் அரசியல்வாதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், இங்கிலாந்து அரசியல்வாதிகளின் கோரிக்கையை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிராகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் காரணமாக பெப்ரவரி-26இல் ஆப்கானிஸ்தான் - இங்கிலாந்து அணிகள் லாகூரில் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

## பும்ராவுக்கு ஓய்வு?



மும்பை, ஜன.09

இங்கிலாந்து அணிக்கு எதிரான இருதரப்பு ரி - 20 தொடரில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஓய்வு வழங்கப்படக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த வாரம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொணடு 5 ஆட்டங்கள் கொண்ட ரி- 20 தொடர் மற்றும் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் விளையாடுகிறது. இதில் ரி - 20 தொடர் முதலில் நடைபெறுகிறது. இதன் முதல் ஆட்டம் வரும் 22ஆம் திகதி கொல்கத்தாவில் நடைபெறுகிறது. இந்த நிலையில் இந்தத் தொடரில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ராவுக்கு ஓய்வு கொடுக்கப்படக்கூடும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## பங்களாதேஷ் அணி அறிவிப்பு

டாக்கா, ஜன.09

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷ் மகளிர் கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் வரும் 19ஆம் திகதி தொடங்குகிறது.

பங்களாதேஷ் அணி விவரம் வருமாறு, நிகர் சுல்தானா ஜோட்டி (தலைவி), நஹிதா அக்டர், முர்ஷிதா காதுன், திலாரா அக்டர், ஷர்மின் அக்தர் சுப்தா, சோபானா மோஸ்டரி, ஷோர்னா அக்தர், லதா மொண்டோல், ரபேயா, பஹிமா காதுன், பரிஹா இஸ்லாம் த்ரிஸ்னா, சுல்தானா காதுன், பர்சானா ஹக், தாஜ் நெஹர், ஷஞ்சிதா அக்தர் மாக் , மருபா அக்தர். (எ)

## பாகிஸ்தான் வீரர்களுக்கு அபராதம் விதித்த ஐ. சி. சி.

டுபாய், ஜன.09

பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ. சி. சி. அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் 2 போட்டிகளிலும் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்காத காரணத்தால் பாகிஸ்தான் வீரர்களுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) அபராதம் விதித்துள்ளது. இதன்படி போட்டி கட்டணத்தில் 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், 5 ஓவர்களை குறிப்பிட்ட நேரத்துக்குள் வீசி முடிக்காத பாகிஸ்தான் அணிக்கு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளில் இருந்து 5 புள்ளிகளும் குறைக்கப்பட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளீன்...

நாட்டு மக்களை ஊக்குவிக்கும் நோக்கிலும், பங்குபற்றுதல் மற்றும் மாற்றத்தை நோக்காகக்கொண்டுமே கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே எம் அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்த முயலும்போது சவால்கள் எதிர்ப்புக்கள் வருவது சாதாரண விடயமாகும்.

ஆகவே இந்த மாற்றத்துக்கு எதிர்ப்பை வெளியிடும் தரப்பினரின் நிகழ்ச்சி நிரலுக்கு அடிபணியப்போவதில்லை.நாம் நாட்டு மக்களுக்கும் மக்கள் ஆணைக்கும் மதிப்பளிக்கின்றோம். ஆகவே அந்த சவால்களை எதிர்கொண்ட வண்ணம் முன்னோக்கி பயணிக்கத் தயாராகவுள்ளோம்.இதில் மக்களின் பங்களிப்பும் அவசியமாகும்.

அந்த வகையில் , ஜனவரி மாதம் 21,22ஆம் திகதிகளில் இடம்பெறும் பாராளுமன்ற அமர்வுகளின்போது கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் இரண்டு நாள் விவாதத்துக்கான சந்தர்ப்பத்தை வழங்க எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (அ)

## சவால்களுக்கு...

ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான நோக்கத்தின் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தியை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டுவந்தனர். ஆழமான மாற்றமொன்றுக்காகவே மக்கள் எமக்கு வாக்களித்தனர். இது நபர் மாற்றத்துக்கான மக்கள் ஆணை மாத்திரமல்ல ஒட்டுமொத்தமாக சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்தின் பிரகாரம் மக்கள் ஆணை வழங்கப்பட்டது. இவ்வாறான மாற்றங்கள் ஏற்படும்போது அதற்கு எதிராக பல சவால்கள் வரும். எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்புகள் இருக்க முடியும். இது யதார்த்தம். மாற்றத்துக்கு எதிரான தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிப்பணிந்து நாம் செயல்பட மாட்டோம்.

நாட்டு மக்கள் வழங்கிய மக்கள் ஆணைக்கே நாம் கௌரவமளிக்கிறோம். அந்த ஆணையின் பிரகாரமே நாம் செயல்படுவோம். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்படும் சவால்களை முறியடித்து செயல்பட தயாராக இருக்கிறோம். சமூக மாற்றத்திற்கு அரச கட்டமைப்பின் பங்களிப்பு மாத்திரம் போதாது மக்களின் பங்களிப்பும் அவசியம் என்பதையே நாம் நம்புகிறோம்.

அதனால் ஒழுக்க ரீதியான விவகாரங்களில் தலையீடு செய்வது அவசியமாகும். இது நிறுவன ரீதியான மாற்றம் அல்ல சமூக ரீதியான மாற்றமாகும். சமூக மாற்றத்துக்கு மக்களின் மாற்றமும் பங்களிப்பும் அவசியமாகும். மக்களின் இயல்புநிலை மாற்றமடைய வேண்டும். இது ஓர், இரு நாட்களில் இடம்பெறும் விடயம் இல்லை.

எமக்கு எதிரான தரப்பினரும் எமது செயல்பாடுகளில் மாற்றமடைவார்கள் என எண்ணுகிறோம். அதிகாரத்தின் ஊடாக எமது திட்டத்தை செய்ய முடியாது. கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பிலான முழுமையான அறிவை பெற அரச அதிகாரிகளும் மக்கள் தெரிந்து கொள்ள சில காலம் செல்லும். அதிகாரத்தின் ஊடாக மாத்திரமே செயல்பாடுகளை செய்துள்ள அனுபவம் அரச ஊழியர்களுக்கு இதற்கு முன்பிருந்தது. அதனால் இதில் சில குறைப்பாடுகள் ஏற்படலாம். அவை வேண்டுமென்றே செய்யும் செயல்கள் அல்ல என நினைக்கிறோம்-என்றார். (அ)

## இந்த...

எதிர்பார்த்ததை விட வேகமான பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் பொருளாதாரம் 5.2 வீத வளர்ச்சியடைந்தது, இது இலங்கை மத்திய வங்கியின் 3 வீத மதிப்பீட்டை விட அதிகமாகும் என்று ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பணவீக்கம் நேர்மறையான பகுதியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதன் பிறகு இலங்கை மத்திய வங்கியின் 5 வீத பணவீக்க விகிதத்தை பராமரிப்பதில் கவனம் செலுத்தும் என்றும் அவர் கூறினார்.

2025ஆம் ஆண்டுக்கும் அதற்கு அப்பாலுக்குமான இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிரந்தர...

சவால்கள் தொடர்பாக இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்காவின் தொடர்ச்சியான பங்களிப்பின் முக்கியத்துவம் தேவையென எடுத்துரைக்கப்பட்டதுடன் அதனுடன் பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள் தொடர்பிலும் இந்த சதிப்பில் ஆராயப்பட்டது.

இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட அமெரிக்கா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கும் என அமெரிக்க தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். (அ)

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச்சட்டம் 1979 இல் தற்காலிக சட்டமாக இயற்றப்பட்டது.

3 தசாப்த கால உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து, 15 வருடங்களுக்கு மேலாகியும் இந்த சட்டத்தை அமுலாக்கும் விடயத்தில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இந்த சட்டத்தைப் பயன்படுத்தி அரசியல் எதிர்கருத்து கொண்டோர், அரசுக்கு எதிரான போராட்டங்கள், வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோர் மற்றும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக இலங்கை கையொப்பமிட்ட மற்றும் அதற்குக் கட்டுப்பட்ட சர்வதேச சட்டங்கள் தொடர்பிலும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் கருத்து தெரிவித்திருந்தமையால், இந்த சட்டத்தை இரத்துச் செய்வதா அல்லது அதற்கான திருத்தத்தைக் கொண்டு வருவதா என்பது குறித்தான தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தப்பட வேண்டும்

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அர்சாங்கத்தின் நிலைப்பாட்டையும், அதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் முன்வைக்கும் மாற்றுத் தீர்வுகள் தொடர்பிலும். இந்தச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கவேண்டும்

மேலும், இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், 72 மணிநேரம் தடுப்புக் காவலில் வைப்பது தொடர்பாக அரசாங்கத்தின் கருத்து தொடர்பிலும், இந்த சட்டத்தின் கீழ் வாரண்ட் இல்லா மல் கைது செய்வது உள்ளிட்டவை குறித்தும் கேள்வி எழுப்பிய எதிர்க் கட்சித் தலைவர், சர்வதேச மனித உரிமைகள் நியமங்களின்படி இதனை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா-என்றார். (அ)

## அரசியல்...

மிகுந்த எதிர்பார்ப்புடன் நியமிக்கப்பட்ட அரசாங்கம்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனே எரிபொருள், மின்சார கட்டணத்தை குறைத்து, ஆண்டுக்கு இருமுறை ஊழியர்களின் சம்பளத்தை அரசாங்கம் உயர்த்தும் என்று நினைத்தோம்.

இன்று பல இடங்களில் அரசியல் பழிவாங்கல்கள் மெல்ல மெல்ல அரங்கேறி வருகின்றன.

இதுபோன்று அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்காக இன்னும் ஓரிரு நாட்களில் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்-என்றார். (அ)

## லசந்த...

கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் உட்பட பல ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமினால் லசந்த விக்கிரதுங்கவின் மரணம் தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

லசந்த விக்கிரமதுங்கவின் மரணம் தொடர்பிலும் அந்த சம்பவம் தொடர்பில் நீதி, நியாயம் வழங்கப்படவேண்டும் என்றும் ரவூப் ஹக்கீம் கூறினார்.

லசந்த விக்கிரமதுங்கவின் விவகாரத்துக்கு நீதியை நிலைநாட்டுவோம். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அரசாங்கம் என்ற வகையில் நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும். கடந்த காலங்களில் வழக்குகளுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன.

சட்டத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பல்வேறு காரணிகளால் தாமதப்படுத்தப்பட்டுள்ள வழக்குகள் முறையாக விசாரணை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்போம்-என்றார். (அ)

# பஸ்களை அலங்கரிக்க அனுமதியளிக்க வேண்டும்

### நாமல் கோரிக்கை

கொழும்பு, ஜன. 09

பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் பஸ்கள் மற்றும் ஓட்டோக்களை அலங்கரிப்பதற்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படவேண்டுமென பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பஸ்கள் மற்றும் ஓட்டோக்களை அலங்கரிப்பது ஒரு தனித்தொழில் அதேபோன்று ஒரு கலை எனவும் நாமல் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத பட்சத்தில் பஸ் மற்றும் ஓட்டோக்களை அலங்கரிப்பதில் பிரச்னை இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## ஒரு லட்சத்து...

நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் டிசம்பர் 4 ஆம் திகதி வழங்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது

## மூன்று...

அமைச்சிற்குச் சென்றிருந்தது.

இதன்போது, அந்த கூட்டமைப்பை அங்கத்துவப்படுத்தி அங்கு சென்றிருந்த இலங்கை ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கல்வி அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடல் ஒன்றைக் கோரியிருந்தனர்.

இதனையடுத்து கல்வி அமைச்சின் அதிகாரிகளுடன் அந்த பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

எனினும், திருப்திகரமான தீர்வு எட்டப்படவில்லை என்றும் தங்களது கோரிக்கைக்கு மூன்று நாட்களுக்குள் தீர்வு கிடைக்காவிடின் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என்றும் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு எச்சரித்துள்ளது. (அ)

# உலக அமைதியை....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடு களை கட்டிக்கொடுப்பதாகும். தாமாகவே தமது கைப்படவே தமது பணியாட்களோடு இணைந்து சிறந்த வீடுகளை அவர் வீடற்றவர்களுக்கு அமைத்துக்கொடுத்திருந்தார். இந்த வீடமைக்கும் பணியில் அவரும் பணியாட் களோடு ஒருவராக இணைந்து கட்டப்படும் வீடுகளின் அடிப்படைத் தேவைகள் சரிவர இருப்பதை உறுதி செய்து தமது பணிகளை மேற்கொண்டார். தமது நாட்டில் மட்டுமல்ல. உலக அமைதிக் காகவும் ஜிம்மி காட்டர் ஆன்மீக உணர்வோடு பணியாற்றினார். வல்லரசுப் போட்டிகள் மற்றும் அன்றைய சோவியத் சோஷலிஸ குடியரசுடன் அமெரிக்காவுக்கு நிலவிய ஆயுதப்போட்டி போன்றவற்றில் ஜிம்மி காட்டர் அதிகம் ஆர்வம் காட்டவில்லை, இதன் காரணமாக அவரது ஆட்சிக்காலம் அமெரிக்காவில் கெடுபிடியான இராணுவ நடவடிக்கைகளுக்கு இடந்தந்திருக்கவில்லை. நோபல் சமாதான பரிசை இதுவரை நான்கு அமெரிக்க ஜனாதிபதிகள் வென்றுள்ளனர். முதலாவதாக தியோடோ ரூஸ்வெல்ட் வென்றிருந்தார். இரண்டாவதாக வூட்ரோ வில்சன், மூன்றாவதாக ஜிம்மி காட்டர் மற்றும் நான்காவதாக பரக் ஒபாமா பெற்றிருந்தார்.அவர் தமது நோபல் பரிசு பணத்தின் பெரும்பகுதியைக்கூட மனிதாபிமானப்பணிகளுக்கே ஜிம்மி காட்டர் வழங்கியிருந்தார்.அமெரிக்க அதிபர்களில் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களில் முதலாவதாக சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆபிரகாம் லிங்கன், இரண்டாவதாக ஜேம்ஸ் ஏ. கார்பீல்ட், மூன்றாவது ஜனாதிபதி வில்லியம் மெக்கின்ஸ், நான்காவது ஜனாதிபதி ஜோன் எப் கென்னடி. இதுதவிர சில அமெரிக்க ஜனாதிபதிகள் மயிரிழையில் கொலை முயற்சியிலிருந்து தப்பியிருந்தனர். ஆனால் ஜிம்மி காட்டர் ஓர் அப்பளுக்கற்ற தலைவராக அமெரிக்காவில் மட்டுமல்ல. சர்வதேச ரீதியாகவும் மதிக்கப்பட்டிருந்தார். அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாக வாழ்ந்த ஜிம்மி காட்டரின் இறுதிச்சடங்குகள் பூரண அரச மரியாதைகளுடன் ஜனவரி இன்று 9-ந்திகதி இடம்பெறவுள்ளது. அமெரிக்க தலைநகர் வாஷங்டனில் அவரது பூதவுடல் பாரம்பரிய பீரங்கி வண்டியில் ஏற்றப்பட்டு குதிரைப்படையினரால் மரத்தினாலும் இரும்பினாலுமான தயாரிக்கப்பட்டுள்ள அப்பீரங்கி வண்டி கொண்டு செல்லப்படும். இப்பீரங்கி வண்டி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்க அதிபராக இருந்து மறைந்தவர்களது பூதவுடல்கள் இந்த பீரங்கி வண்டியிலேயே கொண்டு செல்லப்படுலது வழக்கமாகும்.

ஜிம்மி காட்டரது பூதவுடலும் இப்பீரங்கி வண்டியிலேயே கொண்டு செல்லப்பட்டு 2023ஆம் ஆண்டு மறைந்த அவரது மனைவி ரொஸலின் காட்டரின் கல்லறைக்கு அருகிலேயே நல்லடக்கம் செய்யப்படும். அச்சமயம் அமெரிக்க படைவீரர்கள் மரியாதை வேட்டுக்களை தீர்த்து அஞ்சலி செலுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மொசாட் இலங்கைக்கு வருவது பெரும் ஆபத்து!

## சபையில் கூறினார் முஜிபுர் ரஹமான்



கொழும்பு, ஜன. 09

**இலங்கையில் உள்ள இஸ்ரேல் நாட்டவரின் மதஸ்தலங்கள் மற்றும் கலாசார ஸ்தலங்களுக்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்படுவது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும். மொசாட் இலங்கைக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹமான் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் எழுப்பிய கேள்வியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி, பிரதமர் சபாநாயகர், சபை முதல்வர் என அனைவரும் கடந்த காலத்தில் நிபந்தனைகளின்றி பலஸ்தீன விடுதலைக்காக குரல் கொடுத்தவர்களாகும். கடந்த காலத்தில் அமையபெற்ற அரசாங்கங்கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கு பதிலாக இஸ்ரேலுடன் உறவுகளை பேணிவந்தன. இதனால் மத்திய கிழக்கு நாடுகளுடனான உறிவில் எமக்கு பின்னடைவுகளும் ஏற்பட்டன. பலஸ்தீனம் தொடர்பில் சர்வதேச ரீதியாக எமக்கு இருந்த கௌரவத்துக்கும் கடந்த அரசாங்கங்கள் பாதிப்பை ஏற்படுத்தின.

இலங்கையின் பல பிரதேசங்களில் இஸ்ரேலியர்களின் மதஸ்தலங்கள் மற்றும் கலாசார மத்தியஸ்தலங்களை அமைத்து வருகின்றனர். இவற்றுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதுடன், அவை கட்டடப்பட்டும் வருகின்றன. மாத்தறை வெலிகம பகுதியில் இவ்வாறான கட்டடமொன்று கட்டப்பட்டுள்ளது. தெஹிவளை அல்விஸ் பகுதியிலும் இவ்வாறான கட்டடமொன்று கட்டப்படுகிறது. கொழும்பு 07 சிற்றம்பலம் கார்டினல் வீதியிலும் பாரிய கட்டிடமொன்று கட்டப்படுகிறது.


இந்த கட்டடங்கள் கட்டப்படும் இடங்களுக்கு 24 மணித்தியாலமும் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பின் கீழ் அமைக்கப்படும் கட்டடங்கள் என்ன என்பது தொடர்பிலேயே எமக்கு பிரச்னை உள்ளது.

இலங்கையில் யூதர்கள் இருந்தால் அவர்களுக்கு மதஸ்தலங்களை அமைக்க அனுமதிக்கலாம். ஆனால், அவ்வாறு எவரும் இல்லாத சூழலிலேயே இந்த கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

பலஸ்தீனத்துக்காக நாம் அனைவரும் பாதையில் இறங்கி போராடிய வரலாறு உள்ளது. இந்த கட்டடங்கள் இது தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக நாம் கருதுகிறோம். "மொசாட்" இலங்கைக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல - என்றார். (அ)

# இராணுவத் தடுப்பு வேலிகளை தகர்த்து உள்ளே சென்ற ஓட்டோ

வசாவிளானில் நேற்று அதிகாலை பரபரப்பு



யாழ்ப்பாணம், ஜன. 09

வசாவிளான், குட்டியப்புலம் பகுதியில் இராணுவத்தினரின் தடுப்பு வேலிகளைத் தகர்த்துக் கொண்டு உள்ளே சென்ற ஓட்டோவால் பரபரப்பு ஏற்பட்டது.

வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்று அதிகாலை வேளை பயணித்த ஓட்டோவே இவ்வாறு இராணுவத்தினரின் தடுப்பு வேலிகள், அலங்காரத் தொட்டிகளைத் தகர்த்துக்கொண்டு உள்ளே சென்றது.

இதன்போது காவல் பணியில் இருந்த இராணுவச் சிப்பாய் பதற்றமடைந்து ஓடிச் சென்றார்.

தெரு நாய் ஒன்று ஓட்டோவின் குறுக்கே சென்றபோது அதனை விலகிச் செல்ல முற்பட்ட சமயமே இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோ கடும் சேதமடைந்தது. எனினும், அதில் பயணித்தவர்கள் சிறு காயங்களுடன் உயர் தப்பினர். (அ)

# 1 இலட்சம் குடியேற்றவாசிகள் இலங்கைக்கு வரும் அபாயம்!

அமைச்சர் ஆனந்த விஜேபால எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 09

எதிர்வரும் நாட்களில் 100,000 சட்டவிரோத குடியேற்றவாசிகள் நாட்டுக்கு வரும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சட்டவிரோத குடியேற்றவாசிகள் வருகை குறித்து புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார். (அ)

# மிகக்குறைந்த செலவுடன் 77ஆவது சுதந்திரதின விழா



கொழும்பு, ஜன. 09

77 ஆவது சுதந்திர தின விழாக்கள் குறைக்கப்பட்ட செலவுகள், குறைவான விருந்தினர்கள் மற்றும் செயற்பாடுகளுடன் நடத்தப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, நிகழ்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்திலிருந்து 1,600 ஆக குறைக்கப்படும் என அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதியினால் பாரம்பரியமாக வழங்கப்படும் 21 பீரங்கி வேட்டுகள் இந்த ஆண்டு இடம்பெறாது எனவும் முப்படைகள் மற்றும் பொலிஸ் அணி வகுப்புகளில் இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இராணுவ அணிவகுப்பின்போது ஆயுதம் ஏந்திய வாகனங்கள் காட்சிப்படுத்தும் நிகழ்ச்சி இந்த ஆண்டு சுதந்திர தின விழாவின் ஒரு பகுதியாக நடத்தப்படாது.

இதேவேளை, இந்த ஆண்டு நிகழ்வில் விமானக் காட்சிகள் மட்டுப்படுத்தப்படும் என்றும் இவ்வருட சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறையிலுள்ள அரசியல் கைதிகளை புதிய அரசாவது விடுவிக்கவேண்டும்

## புதுக்குடியிருப்பில் கையெழுத்து வேட்டை



முல்லைத்தீவு, ஜன. 09

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் கையெழுத்துப் போராட்டம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது. போராளிகள் நலன்புரிச் சங்கத் தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் கையெழுத்து போராட்டம் பல்வேறு தரப்பின ரதும் பேராதரவுடன் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட் டுள்ள அரசியல் கைதிகளையும், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட் டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த கையெழுத்துப் போராட் டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜீவராசா, வர்த்தக சங்கத் தலைவர் த.நவநீதன், கலைஞர் மாணிக்கம் ஜெகன், போராளிகள் நலன்புரி சங்கத்தினர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர். (அ)

# தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை உடன் விடுவியுங்கள்!

## நேற்று கையெழுத்துப் போராட்டம்

கிளிநொச்சி, ஜன. 09

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலை சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரி கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழு உறுப்பினர்கள், மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் இணைந்து குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும்பகுதி இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த அபகரிக்கப்பட்ட துயிலுமில்ல காணிக்கு முன்பாக குறித்த கையெழுத்து போராட்டம் முன்னேடுக்கப்பட்டது.



புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு அனுமதி வழங்கியதை போன்று தங்களுடைய பிள்ளைகளின் கல்லறைகள் இருக்கின்ற குறித்த காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்து தருமாறு கையெழுத்து போராட்டத்தில் பங்கேற்றவர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org